**செய்தி வெளியீடு எண் : 990** **நாள் : 18.07.2024**

# செய்தி வெளியீடு

தென்காசி மாவட்டம், செங்கோட்டை வட்டம், மேக்கரை கிராமத்தில் உள்ள அடவிநயினார் நீர்த்தேக்கத்தின் தண்ணீரின் அளவு மற்றும் எதிர்பார்க்கப்படும் நீர்வரத்தினை பொறுத்து அடவிநயினார் கோவில் நீர்த்தேக்க பாசனம் மேட்டுக்கால், கரிசல்கால், பண்பொழிகால், வல்லாக்குளம்கால், இலத்தூர்கால், நயினாரகரம்கால், கிளாங்காடுகால், கம்பிளிகால், புங்கன்கால் மற்றும் சாம்பவர்வடகரை கால்வாய் ஆகியவற்றின் நேரடி பாசனம் நிலங்களுக்கு 1434–ம் பசலி கார் பருவ சாகுபடி செய்வதற்கு அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கத்திலிருந்து 19.07.2024 முதல் 31.10.2024 முடிய 105 நாட்களுக்கு நீர் இருப்பை பொறுத்து வினாடிக்கு 60 கன அடிக்கு மிகாமல் பாசன பருவகாலத்தின் மொத்த தேவை தண்ணீர் அளவான 268.43 மி.க.அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிடுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் தென்காசி மாவட்டத்தில், தென்காசி வட்டம், செங்கோட்டை வட்டம் மற்றும் கடையநல்லூர் வட்டத்தில் உள்ள வடகரை கீழ்பிடாகை, வடகரை மேல்பிடாகை, பண்பொழி, இலத்தூர், குத்துக்கல் வலசை, கொடிக்குறிச்சி, அச்சன்புதூர், நெடுவயல், நயினாகரம், கிளாங்காடு, ஆய்க்குடி மற்றும் சாம்பவர் வடகரையில் 2147.47 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu